# வட இலங்கையில் சமாதானத்திற்கான அரங்கு
# *Theatre for peace in Northern Srilanka*

தேவநாயகம் தேவானந்த்
முனைவர் பட்ட ஆய்வாளர்
இதழியல் மற்றும் தொடர்பியல் துறை , சென்னைப்பல்கலைக்கழகம்

ஆய்வுச் சுருக்கம்

இலங்கையில் 2002 ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைக்காகப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளும் நோர்வே அரசாங்கத்தின் உதவியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (எம்.ஓ.யு) கையெழுத்திட்டனர். அதனைத் தொடர்ந்து நீண்ட உள்நாட்டுப் போர் தற்காலிகமாக முடிவுக்கு வந்தது. இந்த ஒப்பந்தம் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் 2005ல் பொறுப்பேற்றதன் பின் நெருக்கடிக்குள்ளானது. இந்தக்காலகட்டத்தில் இரண்டு தரப்பினரும் போர்நிறுத்தத்தை பயன்படுத்தி தங்கள் ஆயுத பலத்தை வலுப்படுத்திக் கொண்டனர். 2006 இல், மோதல் மீண்டும் வெளிப்படையாகத் தோன்றும் அளவுக்கு நிலைமை மோசமடைந்தது. 2002 – 2006 சமாதான உடன்படிக்கை நடைமுறையிலிருந்த காலகட்டத்தில் 'கரைதேடும் ஓடங்கள் 'நாடகம் மேடையேற்றப்பட்டது. நிலைத்த சமாதானத்துக்காக இலங்கையில் இனவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கிறது. 'கரைதேடும் ஓடங்கள்' நாடகம் சமாதான உடன்படிக்கை நடைமுறையிலிருந்த காலகட்டத்தில் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டதாலும், நிலைத்த சமாதானம் பற்றிய ஆழமான கருத்துக்களை முன்வைப்பதாலும் இது 'சாமாதான அரங்கு' என்ற வரையறைக்குள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. 'கரைதேடும் ஓடங்கள்' நாடகத்தை சமாதானத்திற்கான வரையறைக்குள் வரமுடிகிறதா? அல்லது அதனை மீறுகிறதா? ஏன்ற விடயங்கள் விமர்சன உரைப்பகுப்பாய்வு முறையினூடாகத் திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நோக்கப்படுகின்றது. உண்மையில் கரைதேடும் ஓடங்கள் நாடகம் 'கூட்டு சமூக ஆற்றுப்படுத்தல்' பணியைச் செய்கிறது எனலாம். கடந்தகால துயரங்களை தாக்கவன்மையாகக் காட்டுவதன் மூலம் அதற்குக்காரணமானவர்களை இனங்காட்டி அந்த அதிகார உறவுகளை பார்வையாளர்கள் உணரும் வகை செய்கிறது. இதனால் சமாதான காலத்தின் அமைதி நிலையற்றது என்பதை வலியுறுத்தி அதனை சவாலுக்குட்படுத்துகிறது. இந்த நாடகத்தை புதுவை அன்பன் எழுதி நெறிப்படுத்தியிருந்தார். ஈழநாடக வரலாற்றில் புதுவை அன்பன் என்ற நாடகக்கலைஞர் விடுதலைக்கான அரங்கில் தாக்க வன்மையுடன் ஈடுபட்டு வந்தவர். அவர் , சமாதானத்திற்கான அரங்க நாடகத்தையும் படைக்க முயற்சித்திருக்கிறார். விடுதலைக்கான அரங்கென்பது நிலைத்த சமாதானத்திறகான முயற்சி என்பதை இந்த இரண்டு அரங்கச் செயற்பாடுகள் ஊடாக புதுவை அன்பன் வெளிப்படுத்துகிறார்.

முதன்மைச் சொற்கள் : சமாதானத்திற்கான அரங்கு, விடுதலைக்கான அரங்கு, இலங்கைத் தமிழ் அரங்கு, யுத்தகால அரங்கு, உளசமூக மேம்பாட்டு அரங்கு

## 1.0 அறிமுகம்

இலங்கையில் 2002 ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைக்காகப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளும் நோர்வே அரசாங்கத்தின் உதவியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (எம். ஓ. யு) கையெழுத்திட்டனர். அதனைத் தொடர்ந்து நீண்ட உள்நாட்டுப் போர் தற்காலிகமாக முடிவுக்கு வந்தது. 2002 இல்

இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் 2005ல் பொறுப்பேற்றது. ஆதன் பின்னர்; இந்த அமைதி உடன்படிக்கை நெருக்கடிக்குள்ளானது. 2006 இல், மோதல் மீண்டும் வெளிப்படையாகத் தோன்றும் அளவுக்கு நிலைமை மோசமடைந்தது. (Frerks, G. E., & Klem, B,2004).

2007 இல் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கான கடைசி முயற்சியைத் தொடர்ந்து, 2008 ஜனவரியில் அரசு அதிகாரபூர்வமாக போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகியது இதனால் தீவிர இராணுவ நடவடிக்கை நோக்கி இலங்கையின் உள்நாட்டு போர் சென்றது. கிட்டத்தட்ட 06 ஆண்டுகளுக்குப் பிறகு முழு அளவில் போர்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு

மீண்டும் தொடங்கியது. அதனுடன், இலங்கை அரசாங்கம், புதுப்பிக்கப்பட்ட இராணுவ பலத்துடன் மோதலுக்கான இராணுவத் தீர்வை இலக்காகக் கொண்டது, ஆட்சேர்ப்பை அதிகரித்து போருக்கான ஒரு பரந்த கலாச்சாரத்திற்காக பிரச்சாரம் செய்தது. முன்னெப்போதும் இல்லாத வகையில் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதில் வெற்றி பெற்றது. இதன் விளைவாக, 2009 மே 19 அன்று விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டனர் (Mel, N. D., Samuel, K., & Soysa, C. K,2012).

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைசாத்திடப்பட்ட 2002 காலகட்டத்திலிருந்து 2006 யுத்தம் ஆரம்பிக்கப்படுவதற்குமான இடைப்பட்ட காலத்தில் சமாதான கருத்துக்களை முன்வைத்து விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவால் தயாரிக்கப்பட்ட 'கரைதேடும் ஓடங்கள்' என்ற நாடகம் முக்கியமானது. இந்த நாடகம் விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிகள், இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகள், தமிழர் வாழும் வடதுருவ மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் மேடையேற்றப்பட்டது. இதில் தமிழர் தரப்பு சமாதானத்தை விரும்புவதோடு சிங்கள மக்களுடன் இணைந்து வாழ விரும்புகிறோம் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இனவாத சிந்தனை இந்தச் சமாதானத்தை வரவிடாமல் தடுக்கிறது என்பதாகக் காட்டப்பட்டிருந்தது. இந்த நாடகம் மேடைகளிலும் பொது வெளிகளிலும் மேடையேற்றப்பட்டது. இதனை புதுவை அன்பன் என்ற தொழில் முறை நாடகக் கலைஞன் நெறிப்படுத்தியிருந்தார். தொழில்முறை நாடக்ககுழுவினர் இந்த நாடகத்தை நூற்றுக்கணக்கான இடங்களில் மேடையேற்றினர்.

கிட்டத்தட்ட இரண்டு தசாப்த காலத்துக்கு மேலாக விடுதலைக்கான அரங்கு என்ற எண்ணக்கருவில் தனது அரங்கப்பயணத்தை மேற்கொண்டு வந்த புதுவை அன்பன். முதல் தடவையாக வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள், இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் வாழும் தமிழர்கள் என்று பரந்து பட்ட பார்வையாளர்களுக்காக சமாதானச் செய்தியோடு பயணிக்க ஆரம்பிக்கிறார்கள். அதாவது ஒரு நீண்டகாலம்; அரசியல் அரங்குக்காக, கெரில்லா அரங்குக்காகப் பயணித்தவர்கள் சமாதான அரங்கு நோக்கிய பயணத்தை ஆரம்பிக்கிறார்கள். விடுதலைக்கான அரங்கு, சமாதான அரங்காக ஒரு பரிமாணத்தை எடுக்க ஆரம்பிக்கிறது.

அமைதியைக் கட்டியெழுப்புவதற்கு நாடகம் பங்களிக்கும் என்பதற்கு பல வரலாற்று சான்றுகளை முன்வைக்க முடியும். ஆண்டாண்டு காலமான பல கலை வடிவங்கள் போர், சமாதான பிரச்சினைகளில் ஈடுபட்டுள்ளன, அவை சமாதானத்தை கட்டியெழுப்புதல், போர் எதிர்ப்பு இயக்கங்களில் முக்கியமான கூறுகளாக மாறியுள்ளன: இவற்றில் இசை, ஓவியம், புனைகதை, திரைப்படம், புகைப்படம் போன்ற கலைகள் இந்தப்பணியை செய்துள்ளன. சமாதானத்தை கட்டியெழுப்பும் நடைமுறைக்கு கலைவடிவங்கள் வரலாற்றுரீதியாக துணைநின்றிருக்கின்றன.

பொதுவாக கலை வடிவங்கள் 'குணப்படுத்துதல் மற்றும் மறுகட்டமைப்புக்கான சாத்தியக்கூறுகளையும்' கொண்டுள்ளன. (Agathangelou, A. M., & Ling, L. H.,2009) ) குறிப்பாக, நாடகக்கலை போருக்கு எதிராக குரல் கொடுப்பதில், சுய அடையாளங்களை நிலைநிறுத்துவதில் பங்களித்திருக்கிறது. அரங்கிற்கு ஒரு அரசியல் திறன் இருக்கிறது. அது சமாதானத்திற்கான அரங்கை ஆதரிக்கிறது ( Alison Ross,2008).

வட இலங்கையில் விடுதலைக்கான அரசியல் கருத்துக்களை முன்வைத்து நாடகங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இதில் இலங்கையில் தனிநாட்டுக்காகப் போராடிய விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவினர் தமது கருத்தியலை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக தொழில்முறை நாடகக் குழுக்களை அமைத்து அவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவை வழங்கி மக்களிடம் நாடகங்களை கொண்டு சேர்த்தார்கள். இவ்வாறான ஒரு குழு நாடகக்கலைஞன் புதுவை அன்பன் தலைமையில் இயங்கி வந்தது. இலங்கை அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதான உடன்படிக்கை கைசாத்திடப்பட்ட போது இந்த நாடகக் குழு சமாதானக் கருத்துக்களுடன் நாடகமொன்றைத் தயாரித்து பல்வேறு இடங்களிலும் மேடையேற்றினர். 'கரைதேடும் ஓடங்கள்' அவ்வாறு தயாரிக்கப்பட்ட நாடகம் ஆகும். விடுதலைப்புலிகள் இலங்கை அரசாங்கத்தால் 2009 ஆண்டு முற்றாக அழிக்கப்பட்டனர். இதனால் முழுநேர நாடகக் குழுவாக செயற்பட்டு வந்த தொழில்முறை நாடகக் குழுக்கள் இயங்க முடியாது சிதறுண்டன. இதன் நெறியாளர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். பின்னர் புனர்வாழ்வு முகாங்களில் சிலகாலம் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். ஏனைய நாடகக் கலைஞர்கள் தொழிலின்றி கூலி வேலைகள் செய்து தமது வாழ்வாதரத்தைப் பார்த்துக் கொண்டனர். பொதுவாக இவர்கள் இராணுவக்கெடுபிடி காரணமாக தாம் ஒரு

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு

நாடகக்கலைஞர் என்பதை வெளிக்காட்டத் தயங்கினர். தமது கடந்தகாலச் செயற்பாடுகளையும் மறைத்தனர். இதனால், கரைதேடும் ஓடங்கள் நாடகம் தொடர்பான எந்தவொரு ஆவணங்களும் கிடைக்கவில்லை. அவை அனைத்தும் அழிக்கப்பட்டன அல்லது மறைக்கப்பட்டன. இந்த நிலையில் குறித்த நாடகக்குழு அங்கத்தவர்களை கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளின் பின்னர் சந்தித்து அவர்களின் பணிபற்றிய வாய்மொழித் தகவல்கள் பெறப்பட்டன. நினைவில் இருந்தவைகள் மட்டுமே மீள நினைவுகூரப்பட்டன. தனிப்பட்ட உரையாடல்களும், குழுக்கலந்துரையாடல்கள் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அவை சமாதான அரங்கக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. அதே வேளை சமாதான அரங்கு எவ்வாறு காலத்தின் பதிவாக யுத்த அவலங்களை பதிவு செய்தது என்பதும் ஆராயப்படுகிறது.

## 2.0 ஆய்வு முறை

### 2.1 சமாதானத்துக்கான அரங்கு

நவீன அழகியல் மரபு 'வெறுமனே புனைகதைகளை' உருவாக்குகிறது. அதனைவிட, 'அர்த்த - விளைவுகளை' உருவாக்கும் திறன் அரங்கிற்க்கு உள்ளது.'இங்கு முக்கியமான விடயம் என்னவென்றால், அரங்கில் தான் பொழுதுபோக்கும் பொழுதுபோக்கிற்கு அப்பாற்பட்டதுமான விளைவு சாத்தியமாகும் ( Alison Ross,2008) அரங்கில் அரசியல் முக்கியத்துவத்திற்கான அதன் சாத்தியக்கூறு மற்ற கலை வடிவங்களை விட தனித்துவமானது. அது ஒரு நிகழ்த்துக் கலையாக இருப்பதால் இது சாத்தியமாகிறது. Shirin M. Rai(2010) அரங்கின் கூறுகளில் உட்பொதிக்கப்பட்ட அதிகார உறவுகளை பார்வையாளர்கள் உணரும்போது, அதிகாரத்தை மறுசீரமைப்பதற்கான

மாற்று அரசியல் இடங்கள் மற்றும் முறைகள் தோன்றக்கூடும் என்று வாதிடுகிறார். அரங்கு, இந்தத் திறனைப் பயன்படுத்தி, சில சமயங்களில், இருக்கும் அரசியலை சவாலுக்கு உட்படுத்த முடியும்.
அரங்கு சமூகம் துக்கப்படுவதற்கும் குணப்படுத்துவதற்கும் உதவுகிறது. 'கரைதேடும் ஓடங்கள்' நாடகம் இந்தவகையில் துக்கப்படுவதனூடாக எதிர்காலம் பற்றிய கேள்வியை எழுப்புகிறது.

நாடகம் அமைதியை கட்டியெழுப்ப பங்களிக்க முடியும். பல்வேறு கண்டங்களில் அரசியலை வடிவமைக்கும் கருவியாக நாடகம் பயன்படுத்தப்பட்ட வரலாறு உண்டு. பொதுவாக நாடகங்கள் சமரசம் மற்றும் மோதல் மாற்றத்திற்காக உலகின் பல்வேறு பகுதிகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.( Hazou, R. T,2012) பிரபல இந்திய விமர்சகர் சதானந்த் மேனன் 1800களின் பிற்பகுதியில் 'சுதந்திரப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்களைத் திரட்டுவதில்' நாடகம் ஆற்றிய பங்கு பற்றிக் கருத்துரைத்தார். இலங்கையில் அரங்கு பொதுமக்களின் எதிர்ப்பை வெளிப்படுத்துகிறது.( Rajini Obeyesekere,1999).

அரங்கு பொது மனசாட்சியை உயிர்ப்புடன் வைத்திருந்தது மற்றும் அந்த நேரத்தில் மிகவும் தேவையான தைரியத்தையும் நம்பிக்கையையும் அளித்தது, அதே நேரத்தில் அரசாங்கத்திற்கு மக்கள் எதிர்ப்பை கட்டியெழுப்புவதற்கான ஒரு தளமாகவும் செயல்பட்டது. அமைதியைக் கட்டியெழுப்புவதற்காக அரங்கு அரசியலை தெளிவாக இணைக்கிறது.

எனவே, அரங்கு ஒருபுறம் கலையின் ஒரு வடிவமாகும், இதற்கு பொழுதுபோக்கு நோக்கம் உள்ளது, மறுபுறம் இது ஒரு அமைதியான சமூகத்தை உருவாக்க பங்களிக்கும் தெளிவான அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்கிறது. எனவே அரசியலில் திறம்பட ஈடுபடுவதற்கும் மாற்றுவதற்கும் அரங்கிற்கு ஆற்றல் உள்ளது என்பதை அறிவார்ந்த மற்றும் வரலாற்று சான்றுகள் சாட்சியமளிக்கின்றன. கூட்டு நடவடிக்கை மற்றும் ஒற்றுமைக்காக சமூகங்களை ஒருங்கிணைக்கும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்ட நாடகத்தின் நீண்ட வரலாறு உதவுகிறது. (Zakes Mda,1993).

அரங்கு சமாதானத்தை கட்டியெழுப்பும் அணுகுமுறைக்கு மிகவும் பொருத்தமானது. நீடித்த மோதல் சூழ்நிலைகளில் உருவாகும் தவிர்க்க முடியாத அரசியல், பிளவுபடுத்தும் கலாச்சார கதைகளுக்குள் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு இதுவே தேவைப்படுகிறது. (Jennings,1993).

சமாதானத்திற்கான அரங்க வடிவங்கள் ஒரு பரந்த சமூக கண்ணாடியை ஏற்றுக்கொள்கின்றன.இந்த அடிப்படையில் கரைதேடும் ஓடங்கள் நாடகம் பார்க்கப்படுகின்றது.

**2.2** வறிய அரங்கு

அரங்கு என்றால் என்ன? இதன் தனித்தன்மை என்ன? திரைப்படமும் தொலைக்காட்சியும் செய்ய முடியாத எதை இதில் செய்ய முடியும்? இங்கு அரங்கு தொடர்பான இரண்டு படிமங்கள் உண்டு, வறிய அரங்கு மற்றது மிகைப்படுத்தப்பட்ட அரங்கு. இதில் மிதமிஞ்சியதாக நிரூபிக்கப்பட்ட அனைத்தையும் படிப்படியாக நீக்குவதன் மூலம், அதாவது முகஒப்பனை இல்லாமல், பகட்டான உடைகள் மற்றும் காட்சியமைப்பு இல்லாமல், தனியான

நடிப்பு பகுதி (மேடை), ஒளி மற்றும் ஒலி விளைவுகள் போன்றவை இல்லாமல் அரங்கு இருக்கும் என்பதைக் கண்டறிந்தோம். ஆனால், நடிகர்-பார்வையாளர் உறவு இல்லாமல் அது இருக்க முடியாது. நாடகத்தைப் பற்றிய நமது வழக்கமான கருத்துக்களில் பெரும்பாலும், இலக்கியம், சிற்பம், ஓவியம், கட்டிடக்கலை, ஒளியமைப்பு, நடிப்பு (மிகைப்படுத்தப்பட்ட காட்சியின் வழிகாட்டுதலின் கீழ்) - வேறுபட்ட படைப்புத் துறைகளின் தொகுப்பானது அரங்கு ஆகும். ஆனால், இந்தக் கருத்தை சவால் செய்கிறார் குரோடோவொஸ்கி. தற்போது நம்மத்தியிலுள்ள அரங்கு "செயற்கை அரங்கு" இதை நாம் "வளமான அரங்கு" என்று அழைக்கிறோம். இது குறைபாடுகள் நிறைந்தது.( Grotowski, 2012).

மேலும் Grotowski ( 2012)குறிப்பிடும் போது வளமான அரங்கு கலை சார்ந்த கிளெப்டோமேனியா(kleptomania ), பிற துறைகளில் இருந்து பலவற்றை எடுத்துக் கொண்டு கலப்பு பெருங்காட்சிப்பண்பை வழங்குகின்றது அது ஒரு ஆர்கானிக் கலைப்படைப்பாக (organic artwork) வழங்கப்படுகின்றது. ஆனால் அது அவ்வாறல்ல, கடன் வாங்கப்பட்ட பொறிமுறைகள் ஒரு அதிநவீன தொழில்நுட்ப இதெல்லாம் முட்டாள்தனம். அரங்கு எவ்வளவு விரிவடைந்து அதன் தொழில்நுட்ப ஆதாரங்களை பயன்படுத்தினாலும், அது திரைப்படம் மற்றும் தொலைக்காட்சியை விட தொழில்நுட்ப ரீதியாக தாழ்ந்ததாகவே இருக்கும். இதன் விளைவாக, நான் நாடகத்தில் வறுமையை முன்மொழிகிறேன். ஒவ்வொரு தயாரிப்புக்கும், நடிகர்கள் மற்றும் பார்வையாளர்களுக்காக ஒரு புதிய இடம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று குரட்வஸ்கி குறிப்பிடுகிறார்.

இந்த அரங்கப் பார்வையை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு இலங்கை வடபகுதியில் சமாதானக் காலத்தில் மேடையேற்றப்பட்ட கரைதேடும் ஓடங்கள் நாடகத்தைப் பார்க்க முயல்கிறது. சமாதான அரங்கு நியமமான அரங்க ஆற்றுகை முறைமையைக் கொண்டிருககவில்லை. சுமாதான காலத்தின் சூழலுக்கேற்ப்ப தயாரிப்பு முறையையும் மேடையேற்ற முறையையும் கொண்டிருந்தது. அது குரோட்டவொஸ்கியின் வறிய அரங்கக் கோட்பாட்டினடிப்படையில் பார்க்கப்படத்தக்கது.

தனித்தனியாகவும் கூட்டாகவும் அனுபவித்த கடந்த காலத்தைப் பற்றிய முழுமையான அல்லது வேறுபட்ட புரிதலைப் பெற நினைவக சாட்சியத்தை அரங்கு ஈர்க்கிறது (Thompson, 2000). வாழ்க்கை வரலாறு, வர்க்கம், கலாச்சாரம் மற்றும் பாலினம் ஆகியவற்றால் தீர்மானிக்கப்படும் சமூக செயல்முறைகளைப் புரிந்துகொள்வதற்கான ஒரு பார்வையில் தனிப்பட்ட வாழ்க்கையையும் அதன் சொல்லப்பட்ட வரலாற்றையும் அரங்கு எடுத்துக்கொள்கிறது. தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் அதன் சொல்லப்பட்ட வரலாறு இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு மிகவும் நன்றாக அரங்கில் வெளிப்படுத்தப் படுகிறது. அதே வேளை இரண்டு பெரும்பாலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. ((Bertaux, 1982).

குணப்படுத்துதல், நல்லிணக்கம், அதிகாரமளித்தல் மற்றும் அபிவிருத்திக்காக அரங்கைப் பயன்படுத்துகிறார்கள். இதற்கு பல்வேறு அரங்க வடிவங்கள் சான்றாக உள்ளன. Theatre of oppressed, Applied theatre, playback theatre போன்ற அரங்குகளை இதற்கு சான்றாகக் குறிப்பிடலாம்.

Drama therapy and Psycho drama ஆகிய இரண்டும் சமாதானத்திற்கு பயனுள்ளதாக இருக்கும் அதே வேளையில், சில மோதல்களுக்குப் பிந்தைய சூழ்நிலைகளில் உளவியல் சமூக ஆலோசனைக்காக அரங்கு

பயன்படுத்தப்படுகின்றது, இது அமைதியைக் கட்டியெழுப்பும் அணுகுமுறையாகவும் காணப்படுகிறது. (Jacod Levy Moreno,1947).

பிளேட்டோ நாடகத்தை 'கலைகளில் ஒரே ஆபத்தான வடிவம்' என்று கருதினார். நாடகத்தின்; 'மாற்றியமைக்கும் திறன் அரசியலை மறுவடிவமைக்கும் மற்றும் அதிகார வகிபாகங்களின் விநியோகப் படிநிலையை மாற்றியமைக்ககூடிய சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது' (Ross, A.,2008).

**3.0 தகவலளிக்கையும் பகுப்பாய்வும்**

**3.1 'கரைதேடும் ஓடங்கள்' நாடகம்**

கரைதேடும் ஓடங்கள் நாடகம் ஒரு வரலாற்றுரீதியாக சிங்கள மற்றும் தமிழ் பேசும் மக்களின் உறவு நிலை பற்றிப் பேசுகிறது. சாதாரண மக்கள் மொழி தாண்டி மனித உறவுகளாக கொடுத்து வாங்கி உறவு கொண்டாடி வியாபாரம் செய்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதை காடசிப்படுத்துவதோடு நாடகம் ஆர்ம்பிக்கிறது. இலங்கை சுதந்திரத்திற்கு முன்னும் பின்னுமான காலகட்டத்தில் தமிழர்கள் சிங்கள மக்கள் மத்தியில் தொழில் நிமித்தமாக குடியேறி வாழ்ந்து வந்தார்களா.; அதே போல சிங்களவர்களும் தமிழர் பகுதிகளில் வாழ்ந்தார்கள,; உறவாடினார்கள். இந்த நிலை படிப்படியாக மாறி சிங்ளவர் தமிழருக்கு எதிரியாகவும், தமிழர்கள் சிங்களவர்களுக்கு எதிரியாகவும் பார்க்கும் காலம் உருவாக்கப்பட்டது. இதற்கு அரசியல்வாதிகள் முக்கிய காரணமாக இருந்தார்கள். அவர்கள் 'இனவாதம்' என்ற ஒன்றை வளர்த்து பூதாகாரமாக்கியுள்ளார்கள். இப்போது அதை யாராலும் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கிறது. இனவாதமே நாட்டை ஆளுகிறது. ஆதனால் அழிவுகள் ஏற்படுகின்றன. யுத்தம் இனவாத அரசுக்கு தேவையாக உள்ளது. இதனால் இரண்டு இனத்தையும் சேர்ந்த சாதாரண குடும்பங்கள் அவதிப்படுகின்றன. இந்த யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை 'கரைதேடும் ஓடங்கள்' நாடகம் முன்வைக்கிறது.

நாடகம் கருத்துநிலைப் பாத்திரங்களை குறியீடாகக் கொண்டுவருகின்றது. தமிழ்குடும்மொன்று இனவாத அரசுகளால் தவிர்க்க முடியாமல் ஆயுதமேந்தும் நிலைக்குத் தள்ளப்படும் நிலையை எடுத்துக் காட்டுகிறது.

தொடக்கத்தில், நாடகம் இலங்கையில் காணப்படும் நான்கு சமூகங்களைக் காட்டுவதோடு ஆரம்பமாகிறது. பௌத்தம், இந்து, கிருஸ்தவம், இஸ்லாம் மதங்களின் வழிபாட்டோடு ஆரம்பமாகிறது. இவற்றின் நடுவே 'மனிதம்' என்ற பாத்திரமும் அறிமுகமாகிறது. மனிதம் என்பது அன்பு காருண்யம் ஒற்றுமை போன்ற நற்பண்களின் ஒருமித்த வடிவமாகச் சித்தரிக்கப்படுகிறது. இந்தக்காட்சி முடிவடைந்ததும், இரயில் பயணம் ஒன்று ஆரம்பமாகிறது. இது இலங்கையின் வடபகுதி, அது தமிழர்கள் வாழும் பகுதி, தென்பகுதி அது சிங்களவர்கள் வாழும் பகுதி இந்த இரண்டு பகுதிகளையும் இணைப்பதற்கு யாழ்தேவி என்ற இரயில் காணப்பட்டது. அதைக்குறிப்பதாக ஒரு இரயிலில் பல்வேறு சமூகங்களையும் சார்ந்தவர்கள் ஏறிப்பயணம் செய்வதாக காட்சி அமைந்திருக்கும். ஒரு இசையில் அது அசைவதாக அமைந்திருந்தது. யாழ்தேவி இரயிலில் வடக்கிலிருந்து பொருட்கள் கடிதம் போன்றன எடுத்துச் செல்லப்படும். இரயில் காட்சி முடிந்ததும், கடிதம் ஒன்று தென்பகுதியில் உள்ள அப்புகாமி என்ற சிங்களக் குடும்பத்தவருக்கு கிடைக்கிறது. அவர்கள் அந்தக்கடிதத்தை படிக்கிறார்கள் அது வடக்கிலிருந்து தமிழ்க் குடும்பத்திடமிருந்து அனுப்பப்பட்ட கடிதம். அதனை வாசித்து அவர் பதிலெழுதுகிறார்.

மீண்டும் ரெயில் பயணம் காட்டப்படுகிறது. அம்புகாமி அப்புக்குட்டிக்கு எழுதின கடிதம் கிடைக்கிறது. அதனை அவர் வாசிக்கிறார்.

*தமிழ் குடும்பம்: ''நீங்கள் அனுப்பின ஈரப்பிலாக்காய் கிடைத்தது. புகையிலை சிப்பம் அனுப்பியிருக்கிறம் வாற மாதம் கதிர்காமம் வருவம் உங்கட வீட்டை வருவம்.*

*மீண்டும் இரயில் பயணம் ஆரம்பமாகிறது. அப்புகாமி அனுப்பிய கடிதம் அப்பக்குட்டிக்கு கிடைக்கிறது. சிங்கள குடும்பத்திடமிருந்து கிடைத்த கடிதத்தை அப்புக்குட்டியர் வாசிக்கிறார்.*

*சிங்களக் குடும்பம்: நாங்கள் எல்லோரும் சுகமாக இருகிறம். நீங்கள் அனுப்பின புகையிலைச்சிப்பம் கிடைத்தது.*

*இப்போ அப்புக்குட்டியாரின் மனைவி கேட்கிறார், புகையிலைச்சிப்பத்தின் காசு எப்ப வருவாம். அதுக்கு அப்புக்குட்டி சொல்லுகிறார் ''அந்தாளப்போல நம்பிக்கையான ஆள் கிடைக்குமே, சொன்னபடி அனுப்பிப்போடும் என்று சொல்கிறார். இந்த நம்பிக்கையான நிலை தான் இரண்டு இனத்தவர்களிடமும் பரஸ்பரம் இருந்தது என்பதை நாடகம் மீள நினைவுறுத்துகிறது. இந்த அடிப்படை நம்பிக்கை இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஏற்பட்ட ஜனநாயக தேர்தல் முறையால், அந்த முறையூடாக பெரும்பான்மை பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்காக அரசியல் கட்சிகள் அரசியல்வாதிகள் இனவாதத்தைத் தூண்டி இந்த நம்பிக்கையை உடைத்தார்கள் என்பதை அடுத்த கட்டமாக நாடகம் காட்சிப்படுத்துகிறது. அதாவது சாதாரண பொதுமக்கள் இனமத பேதமின்றி நட்புறவுடன் காணப்பட்டார்கள். அந்தநிலை இலங்கையின் ஜனநாயக அரசியல் முறையால் மாற்றமடைந்தது என்ற விமர்சனத்தை, கண்டனத்தை நாடகம் முன்வைக்கிறது.*

*மேலும், அப்புகாமி எழுதுகிறார் ''நீங்கள் அனுப்பிய பனங்கிழங்கும், ஒடியலும் கிடைச்சது கதிர்காமம் வரும் போது கட்டாயம் வீட்டை வரவேணும்'' என்று எழுதுகிறார். இப்போ மீண்டும் இரயில் பயணம் ஆரம்பமாகிறது. அப்புக்குட்டி குடும்பம் இரயிலில் பயணிக்கிறது. கதிர்காமம் போகிறார்கள். இங்கு கதிர்காமம் என்றது சிங்களப்பகுதியில் உள்ள ஒரு தமிழ் கடவுளான முருகனின் கோவில், அதனை சிங்களவர்களும் வழிபடுகிறார்கள் ஆதரிக்கிறார்கள். அங்கு வருடாந்தம் வழிபாட்டுக்காக தமிழர்கள் செல்வது வழக்கம் அவ்வாறு அப்புக்குட்டி சென்று அங்கு அப்புகாமி வீட்டில் தங்கி சாப்பிட்டு, குழந்தைகள் பரஸ்பரம் விளையாடி மீண்டும் இரயிலேறி வருகிறார்கள். இந்த தமிழ் சிங்கள உறவை நாடகம் மிக அன்யோன்னியமாக காட்சியாக்கியிருந்தது.*

*இந்த நிலையில் சிங்கள மக்களை மாறிமாறி ஆட்சி செய்து வந்த இரண்டு கட்சிகள் ஒன்று ஐக்கிய தேசியக்கட்சி இது பச்சை நிறக்கொடியைக் கொண்டது. மற்றயது சிறிலங்கா சுதந்திரக்கட்சி நீலநிறக்கொடியைக் கொண்டது. இவை இரண்டையும் குறிப்பதாக இரண்டு பேர் ஒருவர் பச்சை தலைப்பா கட்டியிருப்பார் மற்றயவர் நீலத் தலைப்பா கட்டியிருப்பார். இவர்கள் மேடைக்கு வந்து சிங்கள மக்களிடம் வாக்குக் கேட்கிறாரகள். இதில் முக்கியமான விடயமாக அவர்கள் சொல்வது நான் ஆட்சிக்கு வந்தால் தமிழனை ஒடுக்குவேன் என்பதாகும். இதைச்சொல்லியே மக்களுக்கு குழையடிப்பினம். இங்கு 'குழையடித்தல்' என்பது மதநம்பிக்கையுடன் தொடர்பான ஒரு விடயம். ஒருவருக்கு அவர் மீது குறித்தவொரு தெய்வம் வரவேண்டும் என்று வேப்பமிலையால் அவருக்கு மந்திரம் உச்சரித்து அடிப்பதாகும். இவ்வாறு வேப்பிலை அடிக்கும் போது உடுக்கு, பறை போன்ற தாள*

*வாத்தியங்களும் வாசிக்கப்படும். இதன் ஒரு கட்டத்தில் அந்தநபரிடம் சாமி வந்துவிட்டால் அவர் ஆட ஆரம்பிப்பார். இதனை 'உருக்கொள்ளல்' என்று குறிப்பிடுவார்கள். உருக்கொள்ள வைக்க பூசாரியொருவர் வேண்டும். ஆந்த வேலையை இந்த நீலநிற தலைப்பாகை கட்டிய வரும் பச்சைநிற தலைபபாகை கட்டியவரும் செய்வார்கள். சிங்கள மக்களுக்கு உருவேற்றுவார்கள். இதன் உச்சமாக 1983ம் ஆண்டு சிங்களவர்கள் தென்பகுதியில் வாழ்ந்து வந்த தமிழர்களை கொன்றும், பொருட்களை சூறையாடியும், அழித்தும், துரத்தியும் ஒரு பெரிய இனக்கலவரத்தை நடத்தினர். அந்த இனக்கலவரம் அரசியல்வாதிகளின் உருவேற்றலால் நடக்கிறது. இது மேடையில் காட்சியாக்கப்படுகிறது. தென்னிலங்கையில் சிங்கள மக்களோடு பாதுகாப்பாக இருந்த தமிழ் மக்கள் பலர் கொல்லப்படுகிறார்கள், வீடுகளை விட்டு துரத்தப்பட்டார்கள் அவர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன.*

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

© 2022, IRJTSR

*பின்னர் தென்பகுதியில் இருந்த மக்கள் தமது பாதுகாப்பிற்காக வடபகுதிக்கு வந்தனர். அவர்களை லங்காராணி என்ற கப்பலில் ஏற்றி இலங்கை அரசாங்கம் வடக்கிற்கு அனுப்பி வைத்தது. இதனை நாடகம் காட்சியாக்கியிருந்தது. கப்பலொன்று மேடையில் உருவாக்கப்பட்டது. அதில் பாதிக்கப்பட்ட மக்கள் ஏறுகிறார்கள்.*

*இங்கு நாடகத்தில் அரசியல்வாதிகளின் குழையடிப்பால் உருக்கொண்ட சிங்கள மக்கள் இனக்கலவரத்தை உண்டாக்க அப்புகாமி போன்ற நல்ல மனிதர்கள் தமிழர்களைப்பாதுகாத்து லங்காராணி கம்பலில் பாதுகாப்பாக கண்ணீர்மல்க ஏற்றி அனுப்புகிறார்கள்.*

*ஆனால் அரசியல்வாதிகள் அப்புகாமி போன்ற நல்லவர்களையும் விட்டு வைப்பதாகவில்லை, அவர்களுக்கும் குழையடிக்கிறார்கள்.*

*குழையடிப்போர் : இது பௌத்த சிங்கள நாடு………இது பௌத்த சிங்கள நாடு……..இது பௌத்த சிங்கள நாடு…….*

*அதில் அப்புகாமி போன்ற நல்ல மனிதர்களும் உருக்கொண்டு ஆடுகிறார்கள்.*

*இப்போ போர் ஆரம்பமாகிறது. அது ஒரு பாத்திரமாகக் காட்டப்படுகிறது. மக்கள் போரைத் தடுக்கிறார்கள். ஆனால் போர் தீவரமடைந்து மக்களைக் கொல்கிறது, மக்கள் வீழ்கிறார்கள். ஒரு சாதாரண குடும்பத்தின் இளைஞனும் வீழ்கிறான் வீழ்நத இடத்தில் வாளொன்று இருக்கிறது. அதை அவன் எடுக்கிறான். அவன் வாளெடுத்ததைப் பார்த்த அவன் தாய் பதறியபடி அவனைத் தடுக்கிறாள்.,*  
*தாய் : தம்பி எங்க போறாய்?*  
*மகன்: வாழப் போறன்.*  
*தாய்: வாளெடுத்தவன் வாளால தான் மடிவான். நீ போகாதை*  
*மகன்: வாளெடுத்தவன் வாளாள மடிவான்; என்றால் இன்னொருத்தன் அந்த வாளை எடுத்துத் தான் ஆக வேணும்.*

*இந்தக் காட்சியின் பின்னர் வாளெடுத்து போராடப் போனவரின் குடும்பம் காட்சியாக்கப்படுகிறது.*

*தாய் ,தந்தை, மகள், மகன் அடங்கிய இந்தச் சின்னஞ்சிறிய குடும்பம். 1995ஆம் ஆண்டு இலங்கை இராணுவம் வடபகுதி யாழ்ப்பாணக்குடா நாட்டைக் கைப்பற்றும் நோக்கத்தோடு ஆர்மப்பிக்கப்பட்ட சூரியக்கதிர் இராணுவ*

*நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்தவர்கள். இராணுவ நடவடிக்கையிலிருந்து தப்பிப்பதற்காக யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிட்டத்தட்ட ஐந்து லட்சம் மக்கள் வெளியேறினார்கள். அப்போது குடாநாட்டிலிருந்து வெளியேறி வந்து வன்னிப்பெருநிலப்பகுதிக்கு வந்தவர்கள் தான் இந்தக் குடும்பத்தினர். இந்தக் குடும்பத்தின் தந்தையின் தந்தை(தாத்தா) யாழ்குடாநாட்டிற்கு திரும்;பிப்போய் தனியாக வாழ்கிறார். அவர் அடிக்கடி இந்தக் குடும்பத்திற்கு கடிதம் எழுதுவதுண்டு.*

*தாத்தா: எனக்கும் வயது போகுது, என்ர பேரப்பிள்ளைகளைப் பார்க்க ஆசையா இருக்கு நீங்கள் எப்பயடா வருவீங்கள்.*  
*இதைக்கேட்ட தந்தை அதற்கு பதிலளித்து எழுதுமாறு தனது மனைவியிடம் சொல்கிறார்.*

*தந்தை: யாரை நம்பி இங்க வந்தமோ அந்த மனிசரோட தான் திரும்பி வருவம் என்று எழுது.*

*என்று சொல்கிறார். இந்த வசனத்துக்குள் நிறைய விடயங்கள் உள்ளடங்கியிருப்பதைக் காணலாம். இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்தால் பாதுகாப்பில்லையென்று பயந்து தான் இந்தக் குடும்பம் வன்னியில் புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்றது. அதிலிருந்து மீண்டும் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்ல முடியாது என்ற தமது நிலைப்பாட்டைச் சொல்வதோடு, விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணக்குடாநாடு வந்த பின்னரே அதாவது அவர்களுடன் தான் தாமும் வருவதாகக் கூறுகிறார்கள். இதில் பரஸ்பர நம்பிக்கை,*

விருப்பம் என்பவை வெளிக்காட்டப்படுகின்றன. இங்கு, நாடகத்தில் நறுக்காக சுருக்கமாக சொல்லப்பட்ட வசனங்களுக்குப் பின்னால் நீண்ட விடயங்கள், உட்கருத்துக்கள், வரலாறுகள் காணப்படுவதை அவதானிக்கலாம்.

இவ்வாறு பாதுகாப்புக்காக வன்னியில் தஞ்சம் புகுந்த இந்தக்குடும்பத்தின் ஆண்பிள்ளை வாளெடுத்து போராடப் போய்விட்டது. வறுமை , பட்டினி தந்தை சுகவீனமுற்றிருக்கிறார் தாய் பொருளாதாரத் தடையை நீக்கக் கோரி ஐக்கிய நாடுகள் சபை அலுவலகங்கள் முன்னால் நடைபெறும் தொடர் போராட்டங்களுக்குச சென்று விடுகிறார். அதாவது இலங்கையின் உள்நாட்டு யுத்தம் ஐக்கிய நாடுகள் சபை போன்ற அமைப்புக்களின் தலையீட்டுடன் தான் சாத்தியமாகும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடாக இந்தத் தகவலைப்பார்க்க முடியும்.

தாய் பொருளாதாரத் தடைக்கெதிரான போராட்டங்களுக்கு சென்றுவிட அவரது குடும்பம் சாப்பாடு இல்லாது, தவிக்கிறது. கடுமையான உணவுப்பிரச்னை, இந்தப்பிரச்னை போர்முனையில் உள்ள போராளிக்கும் உண்டு. இந்த நிலையில் வீட்டில் தந்தைக்கு மூன்று நாளாகக் கடுமையான காய்ச்சல் , எழும்ப முடியாமல் படுக்கையில் கிடக்கிறார். வீட்டில் சிறுமி மட்டும் இருக்கிறார். வீட்டில் கிடந்த சொற்ப்ப காசை எடுத்துக்கொண்டு அரைஇறாத்தல் பாண் வாங்கப் போகிறாள். அதற்கும் அப்பணம் போதவில்லை, வீதியில் நின்று அரைஇறாத்தல் பாண் வாங்க காசு தருமாறு வீதியால் போய்வருவோரைக் கேட்கிறாள். வீதியால் போவோரும் அவளைப்பார்த்து துயரப்படுகிறார்கள். அவளுக்குக் கொடுக்க அவர்களிடமும் பணம் இல்லை. அப்போது ஒரு போராளி வருகிறான் அவனைப்பின் தொடர்ந்து சென்ற அந்தச் சிறுமி பாண்வாங்க காசு தருமாறு கேட்கிறாள். ஆப்போது அந்தச் சிறுமியை அந்தப் போராளி திரும்பிப் பார்க்கிறான். அது அவனது சொந்தத் தங்கை. அவன் செல்லம் என்று அவளைக்கட்டியணைக்கிறான். 'அரை இறாத்தல் பாண் வாங்க காசில்லை அண்ணை காசு தாங்கோ' என்று

கேட்கிறாள். அவன் தன் சட்டைப் பையைப் பார்க்கிறான், காசேதுவும் இல்லை. அழுதுகிறான். அம்மா N.G.O அலுவலகங்களுக்கு முன்னால மக்கள் பட்டினியால் சாகிறார்கள் என்பதை உலகுக்கு எடுத்துச் சொல்லும் போராட்டத்தில் பங்கு கொள்ளப் போயிட்டா. அப்பா மூன்று நாளா படுத்த படுக்கையாகக் கிடக்கிறார் அவரை ஒருக்கா வந்து பார்த்திட்டுப் போங்கோ" என்று சிறுமி அண்ணனிடம் கேட்கிறாள். அவனும் போக ஆயத்தமாகிறான். ஆப்போது அவனது பொறுப்பாளர் அவனுக்கு சொல்லிவிட்ட அறிவுறுத்தல் நினைவுக்கு வருகிறது. "தம்பி சண்டை நடக்குது போராளிகளுக்கு இரண்டுநாளா சாப்பாடு அனுப்பவில்லை. இன்றைக்கு எப்படியும் அனுப்ப வேணும் உடன வா!" ஏன்ற குரல் கேட்கிறது. அவன் தடுமாறுகிறான், முடிவெடுக்கமுடியாமல் நிக்கிறான். இப்போது போர் என்ற பாத்திரம் வந்து அவனை இழுத்துச் செல்கிறது. அவன் அதன் பின்னே போகிறான். நாடகத்தில் சிறுமி பாண்வாங்க காசு தருமாறு பிச்சை எடுக்கும் காட்சியை பார்த்து பலர் அழுதார்கள். யாழ் மத்திய கல்லூரி என்ற பாடசாலையில் இந்த நாடகததை மேடையேற்றிய போது நாடகம் முடிந்ததும் சிறுமியாக நடித்தவரை ஒரு ஆசிரியர் அழைத்து பணம் கொடுத்து இனிமேல் பிச்சை எடுக்க வேண்டாம் என்று சொல்லிய அனுபவத்தையும் நாடகத்தில் நடித்தவர்கள் பகிர்ந்து கொண்டார்கள்.

போர் இரண்டுபகுதியினரையும் கொல்லுகிறது. நிறையப் பேர் கொல்லப்படுகிறார்கள். சிங்களத் தாய் தமிழ் தாய் இரண்டு பேரும் ஆழுகிறார்கள். இப்போ தாய்மார் "யுத்தம் வேண்டாம்" என்று கத்துகிறார்கள். இதனைக் கேட்ட வீழ்ந்து கிடந்த புலி உறுப்பினரும் இராணுவமும் எழுகிறார்கள். கைகொடுக்கப் போகிறார்கள். மனிதம் இரண்டு சமூகத்தையும் இணைத்து வைக்க முயல்கிறது. ஆனால் இனவாதம் அதுவே யுத்தம் அவர்கள் கைகொடுக்கவிடாமல் தடுக்கிறது. என்பதாக நாடகம் முடிகிறது.

இந்தச்சந்தர்ப்பத்தில் 'பனையால விழுந்தவன மாடேறி மிதிப்பது போல' என்ற பழமொழிக்கமைவாக 'சுனாமி பேரலை அடிச்சு யுத்தம் நடைபெற்ற பகுதிகளில் பேரழிவை ஏற்படுத்துகிறது என்பதையும் காட்சிப்படுத்தியிருந்தார்கள். 2004 ஆண்டு இந்தோனேசியாவில் கடலுக்கடியில் ஏற்பட்ட 8.5 ரிட்டர் அளவிலான நிலநடுக்கம் இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் பேரலையை ஏற்படுத்தி பல்லாயிரக்கணக்கானவர்கள் இறந்து போனார்கள். நீலநிறச் சேலை பின் மேடையில் கடல்மாதிரி அசைக்க அதன் முன் மின்ஒளியைப் பாய்ச்சி அலைபோன்ற தோற்றத்தை உருவாக்கினார்கள். இந்த வேளை ஒப்பாரி பாடல் பாடப்படும். ஒப்பாரிப்பாடல் மனதின் துயரத்தை வெளிப்படுத்திப் பாடப்படும் பாரம்பரியப் பாடலாகும். இது கூட்டுக்கழிவிரக்க நிலையை அடைந்து அழுது ஆற்றுப்படுத்தும் செயல்முறையைத் தூண்டுவதாகும். இதந்த ஒப்பாரிப்பாடலுடன் நாடகம் முடிவடைகிறது.

இந்த நாடகத்தை ஐரோப்பிய மற்றும் வட துருவ நாடுகளில் தமிழ் சமூகத்தின் மத்தியில் மேடையேற்றிய போது அவர்கள் தாம் தாயகத்தில் வாழ்ந்த இளமைப்பருவ நினைவுகள் தூண்டப்பட்டதோடு, தமது உறவுகள் தாயகத்தில் படும்பாடுகள் கண்முன் காட்சியானதால். துயருற்றார்கள் கதறி அழுதார்கள். சிலர் தமது உறவுகளான அப்பா சின்னம்மா என்று கத்தி அழுதார்கள். நோர்வேயில் நாடகம் மேடையேறிய போது நாடக முடிவில் ஒரு அம்மா நடிகையொருவரைக் கட்டி அணைத்து முக்கால் மணிநேரம் குமுறி அழுதார். புறன்னர், தன் கையிலிருந்த தங்க காப்பைக் கழற்றிக் கொடுத்தார். “ஒரு மணித்தியாலத்தில நாங்கள் இலங்கையில மக்கள் படுகிற துன்பத்தை அனுபவிச்சிட்டம்” என்று சொன்னார்கள்.

இந்த நாடகம் யாழ்ப்பாணத்தில் பிரமாண்டமாக நடைபெற்ற ‘மானுடத்தின் ஒன்று கூடல்’ நிகழ்வில் மேடையேற்றப்பட்டது. சாமாதான காலத்தில் சிங்கள தமிழ் இந்திய மற்றும் உலகெங்குமிருந்த கலைஞர்களை அழைத்து விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டு கழகம் யாழ்ப்பாணத்தில் ‘மானுடத்தின் ஒன்று கூடல்’ என்ற மூன்று நாள் கலை ஒன்று கூடலை நடத்தினர். அதில் ‘கரைதேடும் ஓடங்கள்’ நாடகம் மேடையேற்றப்பட்டது. ஆதனைப் பார்த்த சில வெளிநாட்டு வாழ் தமிழர்கள் இந்த நாடகத்தை தமது நாடுகளுக்கும் அழைத்தார்கள். ஆதனால், ஏழு நாடுகளில் இந்த நாடகம் மேடையேற்றப்பட்டது.

### 3.2 சமாதானத்துக்கான அரங்காக ‘கரைதேடும் ஓடங்கள்’ நாடகம்

பொதுவாக கலை வடிவங்கள் 'குணப்படுத்துதல் மற்றும் மறுகட்டமைப்புக்கான சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளன (Agathangelou, A. M., & Ling, L. H.,2009). புதுவை அன்பனின் கரை தேடும் ஓடங்கள் நாடகம் சமாதானக்கால கட்டத்தில் சமாதானச் செய்தியை வெளிப்படுத்த முயற்சித்திருக்கிறது. ஒரே நாடகக் கலைஞர் தனது அரசியல் சார்பு நாடகச் செயல் திட்டதிலிருந்து விலகி சமாதானக் கருத்துநிலையை தனது நாடகத்தில் வெளிப்படுத்த முயற்சித்திருக்கிறார். ஆதற்காக அவர் வரலாற்றில் தமிழர்களும் சிங்களவர்களும் மகிழ்வாக இருந்த தருணத்தை தொட்டுச்செல்வது அல்லது அதிலிருந்து நாடகத்தை தொடங்குவது சமாதானத்துக்கான அரங்கின் பண்புகளை நாடகம் கொண்டுள்ளது என்பதற்கான சான்றாகும். இலங்கையின் சிங்களவர்கள் செறிவாக வாழும் தென்பகுதியையும் தமிழர்கள் செறிவாக வாழும் வடபகுதியையும் இணைக்கின்ற யாழ்தேவி இரயில் பயணம், அது இரண்டு இனங்களையும் ஒன்றிணைத்த முறைமை, நாடகத்தின் சமாதான அரங்கிற்கான நல்ல தொடக்கமாகப்பார்க்கப்படலாம். இந்த இரயில் பயணத்தின் மூலம் தமிழ் சிங்கள உறவை, தொடர்பாடல் நெருக்கத்தை அதன் அன்யோன்னியத்தை காட்சிப்படுத்துவது முக்கியமானது. Jennings (1993) குறிப்பிடுவது போன்று அரங்கு சமாதானத்தை கட்டியெழுப்பும் அணுகுமுறைக்கு மிகவும் பொருத்தமானது. நீடித்த மோதல் சூழ்நிலைகளில் உருவாகும் தவிர்க்க முடியாத அரசியல், பிளவுபடுத்தும் கலாச்சார கதைகளுக்குள் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு இதுவே தேவைப்படுகிறது.

போர் இரண்டு பகுதியினரையும் கொல்லுகிறது. நிறைய இளைஞர்கள் கொல்லப்படுகிறார்கள். இதனால் சிங்களத் தாயும் தமிழ் தாயும் தமது பிள்ளைகளை இழக்கிறார்கள், இதனால் இரண்டு பேரும் ஆழுகிறார்கள். இதனால் தாய்மார்கள்; “யுத்தம் வேண்டாம்” என்று குரல்கொடுக்கிறார்கள். கரைதேடும் ஓடங்கள் நாடகத்தில் புலி உறுப்பினரும் இராணுவமும் கைகொடுத்து சமாதானமாகப் போக விரும்புகிறார்கள் என்பதாக காட்டுவது சமாதானத்துக்கான அரங்கப்பண்பின் முக்கியமான கருத்துநிலை. மனிதம் என்ற பொதுப்பண்பு பாத்திரமாக்கப்பட்டு இரண்டு சமூகத்தையும் இணைத்து வைக்க முயல்கிறது. குறிப்பாக, நாடகக்கலை போருக்கு எதிராக குரல் கொடுப்பதில், சுய அடையாளங்களை நிலைநிறுத்துவதில் பங்களித்திருக்கிறது. அரங்கிற்கு ஒரு அரசியல் திறன் இருக்கிறது. அது சமாதானத்திற்கான அரங்கை ஆதரிக்கிறது ( Alison Ross,2008).

இருந்தாலும் கரைதேடும் ஓடங்கள் நாடகம் சமாதானத்துக்கான அரங்க வெளிப்பாட்டிலிருந்து விலகுவதையும் காணலாம். நாடக நெறியாளர் அரசியல் அரங்கில் காணப்படுவதான சார்பு நிலையை வெளிப்படுத்தும் காட்சிகளையும் வெளிப்படுத்துகிறது. அதாவது யுத்தம் திணிக்கப்படும் போது அதற்கெதிராக தவிர்க்க முடியாமல் ஆயுதமேந்தி போராட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

ஒரு சாதாரண குடும்பத்தின் இளைஞன் இனவாதத்தால் பாதிக்கப்பட்டு வாளெடுக்கிறான். அவன் வாளெடுத்ததைப் பார்த்த அவன் தாய் பதறியபடி அவனைத் தடுக்கிறாள்,

தாய் : தம்பி எங்க போறாய்?

மகன்: வாழப் போறன்.

தாய்: வாளெடுத்தவன் வாளால தான் மடிவான். நீ போகாதை

மகன்: வாளெடுத்தவன் வாளாள மடிவான்; என்றால் இன்னொருத்தன் வாள் எடுத்துத் தான் ஆக வேணும்.

இந்தக் காட்சி மிகவலுள்ளதாகக் காட்டப்படுவதால் நாடகம் சொல்லவருகின்ற சிங்கள தமிழ் உறவுநிலை யுத்தத்தை எதிர்த்தல் என்பன தாழ்வடைகின்றன.

யுத்தம் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது என்பதைக்காட்டுவதனூடாக யுத்தத்தின் கொடுமையை வெளிக்காட்டி யுத்தம் வேண்டாம் என்;ற நிலைப்பாட்டை 'கரைதேடும் ஓடங்கள்' நாடகம் முன்வைக்கிறது. "வீட்டின் வறுமைகாரணமாக அரை இறாத்தல் பாண் வாங்குவதற்காக சிறுமி பிச்சை எடுக்கும் காட்சி உணர்வெழுச்சிமிக்கது. அதே வேளை போராளிகளுக்கும் உணவுத்தட்டுப்பாடு உள்ளது. போன்ற விடயங்கள் யுத்த வறுமையை சிறப்பாக வெளிப்படுத்துகின்றன. அதே வேளை யுத்தம் காரணமாக குடும்பங்கள் சிதறிடிக்கப்பட்டிருப்பதும் பொது நலனில் குடும்ப நலன் நசிந்து போவதும் காட்டப்பட்டிருக்கிறது. தனிமனித உணர்வுகள், குடும்பப்பாசம் என்பன போராளி தங்கையின் வேண்டுகோளை ஏற்ப்பதா? இல்லையா? என்ற குழப்பத்தினூடாகக் காட்டப்படுகின்றது. இது இலட்சியப்பயணங்களுக்கும் தனிமனிதப் பயணங்களுக்குமிடையிலுள்ள முரண்நிலையைச் சுட்டுகின்றன. நாடகத்தின்; மாற்றியமைக்கும் திறன் அரசியலை மறுவடிவமைக்கும் மற்றும் அதிகார வகிபாகங்களின் விநியோகப் படிநிலையை மாற்றியமைக்ககூடிய சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது'( Ross, A.,2008) என்பதற்கேற்ப்ப தனிமனித அபிலாசைகளை மீறி இலட்சியப்பயணம் அமைவதன் சிக்கலை எடுத்துக்காட்டுகிறது எனலாம். நாடகம் பேசும் இந்த விடயம் அதிகார வகிபாகங்களின் விநியோகப் பாதை மீது நிச்சயமாக தாக்கத்தை ஏற்படுத்த வல்லது.

ஒரு யுத்த சூழலில் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக ஐ.க்கிய நாடுகள் சபை போன்ற அமைப்புக்கள் மக்களைக் காப்பாற்ற வேண்டும். நிரந்தர அமைதிக்கு வழிவகுக்க வேண்டும். என்ற கோரிக்கை அம்மா ஐக்கிய நாடுகள் சபை அலுவலகம் முன்பாக நடத்தும் போராட்டம் வெளிப்படுத்துகிறது. இந்த அமைப்புக்களின் செயற்பாடு பற்றிய விமர்சனத்தை நாடகம் முன்வைக்கிறது. முக்கியமாக ஐ.நா சபையின் முதுகெலும்பில்லாத் தனம் வெளிப்படுத்தப்படுகின்றது. மேலும் யுத்தம் காரணமாக நோய் பாதிப்பிலிருந்து மீளமுடியாத நிலையை "அப்பா மூன்றுநாளா படுத்த படுக்கையாகக் கிடக்கிறார் அவரை ஒருக்கா வந்து பாத்திட்டுப்போங்கோ" என்று சிறுமி அண்ணனிடம் கேட்கும் காட்சியூடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

ஒரு நீண்ட யுத்தத்தின் அவலங்களை வெளிப்படுத்துவதன் ஊடாக 'கரைதேடும் ஓடங்கள்' நாடகம் யுத்தம் வேண்டாம். சமாதானம் வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கிறது. இருந்தாலும் யுத்தம் திணிக்கப்பட்டால் அதற்கெதிராக ஆயதமேந்திப் போராட வேண்டும் என்ற கருத்தையும் சார்ந்திருக்கிறது. எதிரெதிரான இரண்டு கருத்துநிலையில் நாடகம் நிலைநிறுத்தப்படமுடியாது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

இருப்பினும் கரைதேடும் ஓடங்கள் ஒரு வகையில் ஆற்றுப்படுத்தல் பணியை செய்திருக்கிறது, இந்த வகையில் அதனை சமாதான அரங்க வரையறைக்குள் கொண்டு வர முடியும். குறிப்பாக, இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் ஐரோப்பிய நாடுகளில் மேடையேற்றப்பட்ட போது இந்தப் பணியை ஆற்றியிருப்பதை இனங்காண முடியும்.. Drama therapy and Psycho drama ஆகிய இரண்டும் சமாதானத்திற்கு பயனுள்ளதாக இருக்கும் அதே வேளையில், சில மோதல்களுக்குப் பிந்தைய சூழ்நிலைகளில் உளவியல் சமூக ஆலோசனைக்காக அரங்கு பயன்படுத்தப்படுகின்றது, இது அமைதியைக் கட்டியெழுப்பும் அணுகுமுறையாகவும் காணப்படுகிறது. (Jacod Levy Moreno,1947 என்ற கருத்து முக்கியமாகிறது.

**3.3** *வறிய அரங்காக ‘கரைதேடும் ஓடங்கள்’*

*புதுவை அன்பன் எழுதி நெறிப்படுத்தி மேடையேற்றிய எல்லா நாடகங்களையும் வறிய அரங்கப்பண்பு கொண்டவை என்று சொல்லலாம். குரொட்டவஸ்கி குறிப்பிடுவது போன்று இங்கு நடிகர்கள் பகட்டான முகஒப்பனை இல்லாமல், பகட்டான உடைகள் மற்றும் காட்சியமைப்பு இல்லாமல், தனியான நடிப்பு பகுதி (மேடை), ஒளி மற்றும் ஒலி விளைவுகள் போன்றவை இல்லாமல் இந்த அரங்கு பயணித்திருக்கிறது.*

*‘கரைதேடும் ஓடங்கள்’ நாடகத்தின் மேடைவெளி வெறுவெளியாகவே இருக்கும். கிடைக்கும் வெளிகளெல்லாம். ஆற்றுகை வெளிகளாகியிருக்கின்றன. நடிகர்கள் எளிமையான உடையின் மேலே சில ஏற்பாடுகளைச் செய்வதனூடாகப் பாத்திரங்களாகச் செய்து காட்டினார்கள்.*

*கரைதேடும் ஓடங்கள் நாடகம் இசைப்பாடல்களில் அதிகம் தங்கியிருந்தது. நெறியாளரே பாடலாசிரியராகவும், இசையமைப்பாளராகவும் இருந்த காரணத்தால் இது சாத்தியமாகியிருக்கிறது.*

*இங்கு ஆர்கானிக் கலைப்படைப்பாக* (organic artwork) *கரைதேடும் ஓடங்கள் நாடகம் காணப்பட்டிருக்கிறது எனலாம். அதே வேளை கிராம்சி குறிப்பிடுவது போன்று புதுவை அன்பன்* Organic Intellectual *ஆக காணப்படுகிறார். ஒவ்வொரு தயாரிப்புக்கும், நடிகர்கள் மற்றும் பார்வையாளர்களுக்காக ஒரு புதிய இடம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று குரட்வஸ்கி குறிப்பிடுவது இங்கு பொருந்துகிறது.*

*ஆகவே கரைதேடும் ஓடங்கள் பகட்டாரவாரம் இல்லாது ஆற்றுகைசெய்யப்பட்ட நாடகமென்ற வகையில் அது ஒரு வறிய அரங்காகவும் இனங்காணத்தக்கது.*

**4.0** *முடிவாக*

*இலங்கையில் நீண்ட கொடிய யுத்தத்தால் சிங்களத் தாய்மாரும் தமிழ்த்தாய்மாரும் பாதிக்கப்படுகிறார்கள். இதற்கு அரசியல்வாதிகள் முக்கிய காரணமாக இருக்கிறார்கள். ஆவர்கள் மக்கள் மத்தியில் இனவாத சிந்தனையைப் பரப்பி யுத்தத்தை தூண்டுகிறார்கள். அது நிறுத்தப்பட வேண்டும் என்பதை தாய்மாரின் குரலாக வெளிப்படுத்துகிறது நாடகம். இலங்கையில் ஆரங்கு பொதுமக்களின் எதிர்ப்பை வெளிப்படுத்துகிறது.*( Rajini Obeyesekere,1999) *என்பது கரைதேடும் ஓடங்கள் நாடகத்தில் துலக்கமாகிறது.*

*இலங்கையில் இனவாதம் பூதாகாரமாக வளர்ந்து கட:டுக்கடங்காமல் உள்ளது. இனவாதம் நாட்டை அழிக்கிறது என்பதை நாடகம் வெளிப்படுத்துகிறது. இதனால் சாதாரண குடும்பங்கள் அவதிப்படுகின்றன. ஆகவே, இந்த யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்ற கருத்ததை ‘கரைதேடும் ஓடங்கள்’ நாடகம் முன்வைக்கிறது.*

*நாடகம் கருத்துநிலைப் பாத்திரங்களான சமாதானம், இனவாதம், யுத்தம் போன்றவற்றை குறியீடாகக் கொண்டுவருகின்றது. தமிழ் குடும்பமொன்று இனவாத அரசுகளால் தவிர்க்க முடியாமல் ஆயுதமேந்தும் நிலைக்குத் தள்ளப்படுகிறது என்பதையும் காட்டுகிறது. அரங்கு சமாதானத்தை கட்டியெழுப்பும் அணுகுமுறைக்கு மிகவும் பொருத்தமானது. நீடித்த மோதல் சூழ்நிலைகளில் உருவாகும் தவிர்க்க முடியாத அரசியல், பிளவுபடுத்தும் கலாச்சார கதைகளுக்குள் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு இதுவே தேவைப்படுகிறது* (Jennings,1993).

*இலங்கையின் வரலாற்றை மீளபடைப்பதன் மூலம் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் விமர்சனரீதியாக பார்க்கிறது. தனித்தனியாகவும் கூட்டாகவும் அனுபவித்த கடந்த காலத்தைப் பற்றிய முழுமையான அல்லது வேறுபட்ட புரிதலைப் பெற நினைவக சாட்சியத்தை அரங்கு பயன்படுத்துகிறது* (Thompson, 2000). *இருந்தாலும் சமாதானத்துக்கான முன்நகர்வுகள் நாடகத்தில் காணப்படவில்லை. யுத்தம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படுவதால் அதற்கு எதிராக போராட வேண்டும் என்ற கருத்தே நாடகத்தில் முதன்மை பெறுகிறது. இங்கு பிரபல இந்திய விமர்சகர் சதானந் மேனன் குறிப்பிட்ட கருத்து பொருந்திவருவதை அவதானிக்கலாம். அதாவது* 1800*களின் பிற்பகுதியில் “இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்களைத் திரட்டுவதில்' நாடகம்*

பங்காற்றியது என்று குறிப்பிடுகிறார். புதுவை அன்பனின் ‘கரைதேடும் ஓடங்கள்’ நாடகமும் அந்தப்பணியையே சமாதானத்திற்கான அரங்க ஆற்றுகையிலும் மேற்கொண்டிருக்கிறது.

உண்மையில் கரைதேடும் ஓடங்கள் நாடகம் ‘கூட்டு ஆற்றுப்படுத்தல்’ பணியைச் செய்கிறது எனலாம். கடந்தகால துயரங்களை தாக்கவன்மையாகக் காட்டுவதன் மூலம் அதற்குக் காரணமானவர்களை இனங்காட்டி அந்த அதிகார உறவுகளை பார்வையாளர்கள் உணரும் வகை செய்கிறது. இதனால் சமாதான காலத்தின் தற்காலிக அமைதி நிலையற்றது என்பதை வலியுறுத்தி அதனை சவாலுக்குட்படுத்துகிறது. ஆதனால் ‘கரைதேடும் ஓடங்கள்’ நாடகம் விடுதலை நோக்கிய அரங்கப்பயணத்திலிருந்து நிலையான சமாதானம் என்ற எண்ணத்தோடு பயணிப்பதில் தெளிவான கருத்தியலை முன்வைக்கத்தவறிவிடுகிறது. இருந்தாலும், அரங்கு சமூகங்களில் துக்கப்படுவதற்கும் குணப்படுத்துவதற்கும் உதவுகிறது. கரைதேடும் ஓடங்கள் நாடகம் இந்தவகையில் துக்கப்படுவதனூடாக எதிர்காலம் பற்றிய கேள்வியை எழுப்புகிறது. ஈழநாடக வரலாற்றில் புதுவை அன்பன் என்ற நாடகக்கலைஞரே விடுதலைக்கான அரங்கையும் , சமாதானத்திற்கான அரங்கையும் படைப்பதைக் காணலாம். இதில் ஒரு சமாதானத்துக்கான அரங்கில் தெளிவான செயல் இயக்கம் வெளிப்படவில்லை. இருந்தாலும், விடுதலைக்கான அரங்கென்பது நிலைத்த சமாதானத்திற்கான முயற்சி என்பதை இந்த இரண்டு அரங்கச் செயற்பாடுகள் ஊடாக புதுவை அன்பன் வெளிப்படுத்துகிறார். அதாவது நாடகத்தின்; 'மாற்றியமைக்கும் திறன் அரசியலை மறுவடிவமைக்கும் மற்றும் அதிகார வகிபாகங்களின் விநியோகப் படிநிலையை மாற்றியமைக்ககூடிய சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது' Ross, A.,2008). ஏன்பதை புதுவை அன்பன் நிரூபிக்கிறார்.

இந்த அரங்கில் யுத்த அவலங்கள் தனிமனிதப் பிரச்னைகள் குடும்பங்களின் பிரச்னைகள் பதியப்பட்டிருக்கின்றன. தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் அதன் சொல்லப்பட்ட வரலாறு இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு மிகவும் நன்றாக அரங்கில் வெளிப்படுத்தப் படுகிறது. அதே வேளை இரண்டு பெரும்பாலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன.

ஆகவே அரங்கு ஆக்கபூர்வமானது, மனித விடுதலைக்கானது, மனித அடையாளத்தின் வெளிப்பாடு என்பது உணரப்படுகிறது. சமாதான காலகட்டத்தில் யுத்தம் தற்காலிகமாக முடிவுக்கு வருவது மட்டும் விடுதலைக்கான தகுதி நிலையாக அமையாது. நாம் சமாதானத்தை,விடுதலையை உணர்வதற்கு அரங்கு அவசியம்.மனதில் ஊடுருவி தசையில் தொடுவது அரங்கு தான். அதனால் அது சாதிப்பது பல. பொது எதிரி தொலையும் போது சிறிது சறிதாக பல எதிரிகள் எமக்குள் நுழைந்து கொள்வார்கள். அதனைப் புரிந்து கொள்வதற்கும் போராடுவதற்குமான பலத்தை கொடுக்க அரங்கு அவசியமாகிறது. சமூக விடுதலைக்கும், ஆரோக்கியமான மனித விழுமியம் சார்ந்த சமூக உருவாக்கத்திற்கும் அரங்கு அவசியம். (தேவானந்த், 2004).

இந்த ஆய்வை மேற்கொள்வதற்கு மட்டுப்பாடுகள் நிறையவே இருந்தன. இராணுவகெடுபிடி காரணமாக தம்மிடம் தகவல் சேகரிப்பவர்கள் பற்றிய முன்னெச்சரிக்கை உணர்வு காணப்படுவதால் நாடகக் கலைஞர்கள் சுயதணிக்கை செய்தார்கள். இதனால் முழுமையான தகவல்களை பெறுவதற்கு மேலும் பல காலம் செல்லலாம்.

எனவே, Zakes Mda(1993) குறிப்பிடுவது போன்று அரங்கு ஒருபுறம் கலையின் ஒரு வடிவமாகும், இதற்கு பொழுதுபோக்கு நோக்கம் உள்ளது, மறுபுறம் இது ஒரு அமைதியான சமூகத்தை உருவாக்க பங்களிக்கும் தெளிவான அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்கிறது. எனவே அரசியலில் திறம்பட ஈடுபடுவதற்கும் மாற்றுவதற்கும் அரங்கிற்கு ஆற்றல் உள்ளது என்பதை அறிவார்ந்த மற்றும் வரலாற்று சான்றுகள் சாட்சியமளிக்கின்றன. கூட்டு நடவடிக்கை மற்றும் ஒற்றுமைக்காக சமூகங்களை ஒருங்கிணைக்கும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்ட நாடகத்தின் நீண்ட வரலாறு உதவுகிறது. (Zakes Mda,1993).

இருப்பினும் ‘கரைதேடும் ஓடங்கள்’ ஒரு வகையில் ஆற்றுப்படுத்தல் பணியை செய்திருக்கிறது, பார்வையாளர்கள் தங்கள் ஆழ்மன உணர்வுகளை அழுகையாக வெளிப்படுத்த உதவியிருக்கிறது. குறிப்பாக இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் ஐரோப்பிய நாடுகளில் இந்த நாடகம் மேடையேற்றப்பட்ட போது அதனைப் பார்த்த பலர் அழுதிருக்கிறார்கள் குற்றவுணர்வடைந்து நடிகர்களுக்கு எதையாவது கொடுக்க வேண்டும் என்று எண்ணியிருக்கிறார்கள். அவ்வாறு கொடுப்பதால் தாம் ஆறுதலடைந்திருக்கிறார்கள். தமது சொந்த நாட்டை விட்டு

*வேறொரு நாட்டில் வாழும் மக்களின் மனத் துயர் விடிவிப்புக்கு நாடகம் உதவியிருக்கிறது. இது ஒரு வகையில் உளசமூகப் பணியாகும். இதனை அடிபபடையாகக் கொண்டு 'கரைதேடும் ஓடங்கள்' நாடகத்தை சமாதான அரங்க வரையறைக்குள் கொண்டு வர முடியும்.* Drama therapy & Psycho drama *ஆகிய இரண்டும் சமாதானத்திற்கு பயனுள்ளதாக இருக்கும் அதே வேளையில், சில மோதல்களுக்குப் பிந்தைய சூழ்நிலைகளில் உளவியல் சமூக ஆலோசனைக்காக அரங்கு பயன்படுத்தப்படுகின்றது, இது அமைதியைக் கட்டியெழுப்பும் அணுகுமுறையாகவும் காணப்படுகிறது.* (Jacod Levy Moreno,1947) *என்ற கருத்து முக்கியம் பெறுகிறது. அரங்கின் பணி மகிழ்வளிப்பது அல்ல அரங்கு என்னும் கலைவடிவத்தின் வாயிலாக நிகழ்த்திக் காட்டுவோரும், பார்ப்போரும் தம்மை தளைப்படுத்தி நிற்கும் கட்டுகளிலிருந்து விடுபட்டு, விவாதிக்கும் ஒருகளமாக (Forum) அது அமைய வேண்டும் என்பது இந்த நோக்கின் அடிப்படையாகும். நாடகத்தின் வடிவிலும் பார்க்க அதன் ஆற்றுகை வன்மையே முக்கியமானதாகும். (கா.சிவத்தம்பி,1994)*

**உசாத்துணை நூல்கள்,**


[1] Moreno, J. L. (1947). The social atom and death. *Sociometry*, *10*(1), 80-84.

[2] Agathangelou, A. M., & Ling, L. H. (2009). Transforming world Allegory to Political Commitment. Derrida Today, 1(1), 76-94.

[3] Frerks, G. (2013). Discourses of war, peace and peacebuilding in Sri Lanka. In *Disaster, Conflict and Society in Crises* (pp. 35-53). Routledge.

[4] Frerks, G. E., & Klem, B. (2004). *Dealing with diversity, Sri Lankan discourses on peace and conflict*. Clingendael Institute of International Relations.

[5] Grotowski, J., 2012. Toward a Poor Theater. Taylor & Francis, Oxford.

[6] Hazou, R. T. (2012). ACTING TOGETHER: PERFORMANCE AND THE CREATIVE TRANSFORMATION OF CONFLICT. VOLUME I: RESISTANCE AND RECONCILIATION IN REGIONS OF VIOLENCE. *Australasian Drama Studies*, (61), 193.

[7] http://en.wikipedia.org/wiki/Jana_Natya_Manch Wikipedia. (2013, September 10). Theatre http://en.wikipedia.org/wiki/Theatre_of_the_Oppressed

[8] IN REGIONS OF VIOLENCE. Australasian Drama Studies, (61), 193. In Handbook of Ethnic Conflict (pp. 93-118). Springer, Boston, MA.

[9] Jennings, S. (2014). *Dramatherapy: Theory and practice 1*. Routledge.

[10] Mda, Z. (2020). When people play people. In *The applied theatre reader* (pp. 193-199). Routledge.

[11] Mel, N. D., Samuel, K., & Soysa, C. K. (2012). Ethnopolitical conflict in Sri Lanka: Trajectories and transformations. In *Handbook of Ethnic Conflict* (pp. 93-118). Springer, Boston, MA.

[12] Moreno, J. L. (1940). Mental catharsis and the psychodrama. *Sociometry*, *3*(3), 209-244.

[13] Obeyesekere, R. (1999). *Sri Lankan theater in a time of terror: Political satire in a permitted space*. SAGE Publications Pvt. Limited.

[14] Premaratna, N. (2018). Theatre for peacebuilding. In *Theatre for Peacebuilding* (pp. 65-103). Palgrave Macmillan, Cham.

[15] Ross, A. (2008). Derrida's Writing-Theatre: From the Theatrical Allegory to Political Commitment. *Derrida Today*, *1*(1), 76-94.

[16] Thompson, J. (2005, April). Theatre of pain, Theatre of beauty. In *Researching Drama and Theatre in Education Conference, University of Exeter*.

[17] புதுவை அன்பன். (2004, ஜனவரி – யூன்)போராட்ட வாழ்வே அரங்காக..., கட்டியம் :உலகத் தமிழர் ஆய்விதழ், பக் 87-103.

[18] தேவானந்த், தே. (2004, பெப்ரவரி, 19) விடுதலைக்கான அரங்கு உண்மையில் ஒன்று அல்ல, ஈழநாதம், பக் 26-28.

[19] சிவத்தம்பி, கா. (1995) நாடக ஆக்கமும் அரங்கின்' அழகியலும்' சமூக மாற்றம் பற்றிய ஆழமான கருத்து நிலைப் பிரச்சினை மையமாக மேற்கிளம்பும் செயல் முனைப்பு நிலை. சிதம்பரநாதன். க, சமூகமாற்றத்துக்கான அரங்கு ( இரண்டாம் பதிப்பு)